# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல்

**நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் தொடர்பான சட்டத்தை ஒருசீராக ஏற்புடையதாக்குவதற்காக ஏற்பாடுசெய்வதற்கும்; நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதிப்பதற்குத் தண்டனையளிப்பதிலான நடவடிக்கைமுறைக்காக ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் 2023, யூலை மாதம் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, யூன் மாதம் 27 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **188 ஆம் சட்டமூலம்** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 36.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல்

ச.வ.- ஓ. 55/2021

**நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் தொடர்பான சட்டத்தை ஒருசீராக ஏற்புடையதாக்குவதற்காக ஏற்பாடுசெய்வதற்கும்; நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதிப்பதற்குத் தண்டனையளிப்பதிலான நடவடிக்கைமுறைக்காக ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் பற்றிய சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சட்டத்தின் குறிக்கோள்கள்

**2.** இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) நீதிமன்றம், நியாயசபை மற்றும் நிறுவனமொன்றின் கௌரவத்தையும் அதிகாரத்தையும் போற்றிக்காத்தல்;

(ஆ) முறையான நீதி நிருவாகத்தைப் பாதுகாத்தல்;

(இ) நீதிமுறைப் பணிப்புரைகளுக்கு அமைந்தொழுகுவதனை உறுதிப்படுத்துதல்;

(ஈ) நீதிமன்றம், நியாயசபை மற்றும் நிறுவனமொன்றின் பயனுறுதன்மையையும் அத்துடன் பாரபட்சமின்மையையும் பேணிக்காத்தலும் பேணுதலும்;

(உ) பொதுமக்களின் ஒழுங்கமைதி, பொதுமக்களின் சுகாதாரம் மற்றும் ஒழுக்கநெறிகளை இடர்காத்தல்;

(ஊ) கருத்துத்தெரிவிப்புரிமை, நியாயமான கருத்துரை மற்றும் நிதிமுறைப் பணிப்புரைகளுடனான இணங்கியொழுகுகை என்பவற்றுக்கிடையே ஒரு சமநிலையை நிலைநாட்டுதல்;

(எ) நீதிமன்றம், நியாயசபை மற்றும் நிறுவனமொன்றின் அவமதிப்பு வரம்பைத் துல்லியமாக எடுத்துக்கூறுதல்; அத்துடன்

(ஏ) சட்டத்தின் உரிய நடைமுறை கடைப்பிடிக்கப்படுவதனையும் அதற்கு மதிப்பளிக்கப்படுவதனையும் உறுதிப்படுத்துதல்.

*குறித்தசில செயல்கள் நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அவமதிப்பாகக் கருதப்படுதல்*

**3.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிரவும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமையவும், பின்வருவனவற்றைச்செய்யும் உட்கருத்துடன் ஒரு செயலை அல்லது செய்யாமையைப் புரிகின்ற எவரேனும் ஆள், விடயத்துக்கேற்ப, நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அவமதிப்பைப் புரிகின்றார்:-

(அ) நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அதிகாரத்தையும் நீதிநிருவாகத்தையும் அவமரியாதைக்கு அல்லது புறக்கணிப்புக்கு உட்படுத்துதல்; அல்லது

(ஆ) நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஏதேனும் வழக்காடல் தொடர்பாக நீதிமுறைசார் நடைமுறையுடன் தலையிடுதல் அல்லது அதற்குப் பங்கம் விளைவித்தல்.

(2) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிரவும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமையவும், பின்வரும் செயல்களுள் எவற்றையும் செய்கின்ற எவரேனுமாள், விடயத்துக்கேற்ப, நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அவமதிப்பைப் புரிகின்றார்:-

(அ) நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் ஏதேனும் தீர்ப்பு, தீர்வை, பணிப்பு, கட்டளை, எழுத்தாணை அல்லது வேறு மன்றாணைக்கு வேண்டுமென்று கீழ்ப்படியாமை;

(ஆ) நீதிமன்றம் நியாயசபை அல்லது நிறுவனமொன்றிற்குக் கொடுக்கப்பட்டவொரு பொறுப்பேற்பை வேண்டுமென்று மீறுகின்றமை;

(இ) பொருளளவில் உண்மையற்ற ஏதேனும் விடயத்தைப்பற்றி ஏதேனும் கருத்துத்தெரிவிக்கின்றமை, விளம்புகின்றமை அல்லது வெளியிடுகின்றமை பின்வருவனவற்றைச் செய்கின்ற வேறு ஏதேனும் செயலைச் செய்கின்றமை:-

(i) நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் நீதிமுறை அதிகாரத்தை அல்லது கௌரவத்தை அவதூறுக்குட்படுத்துவது அல்லது குறைப்பது;

(ii) ஏதேனும் நீதிமுறை வழக்கு நடவடிக்கையின் உரிய நெறியைப் பங்கப்படுத்துவது அல்லது அதனோடு தலையிடுவது; அல்லது

(iii) நீதிநிருவாகத்துடன் தலையிடுவது அல்லது முட்டுக்கட்டையிடுவது;

(ஈ) (i) ஏலவே பெற்றுக்கொள்ளப்பட்ட நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அனுமதியின்றி, ஒரு நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனத்தில் கட்புல அல்லது செவிப்புலப் பதிவின் அல்லது இரண்டினது நோக்கத்துக்காக ஏதேனும் இலத்திரனியல் உபகரணத்தை அல்லது வேறு கருவியைப் பயன்படுத்துகின்றமை அல்லது அத்தகைய கட்புல அல்லது செவிப்புலப் பதிவின்

அல்லது இரண்டினதும் நோக்கத்துக்காக அத்தகைய ஏதேனும் உபகரணத்தை அல்லது கருவியை நீதிமன்றம் நியாசபை அல்லது நிறுவனமொன்றினுள் கொண்டுவருகின்றமை; அல்லது

(ii) ஏலவே பெற்றுக்கொள்ளப்பட்ட நீதிமன்றம் நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அனுமதியின்றி, ஏதேனும் இலத்திரனியல் உபகரணத்தின்மூலம் அல்லது வேறு கருவியின் மூலம் செய்யப்பட்ட நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் வழக்குநடவடிக்கையின் அல்லது வழக்கு நடவடிக்கையின் பாகத்தினது கட்புல அல்லது செவிப்புலப் பதிவின் அல்லது இரண்டினதும் அல்லது அத்தகைய உபகரணத்தி லிருந்து அல்லது கருவியிலிருந்து நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பெறப்பட்ட ஏதேனும் பதிவின் வெளியிடுகை அல்லது அனுப்புகை; அல்லது

(iii) உட்பந்தி (i) அல்லது உட்பந்தி (ii) இன்கீழ் வழங் கப்பட்ட ஏதேனும் அனுமதியை மீறி ஏதேனும் இலத்திரனியல் உபகரணத்தின் அல்லது வேறு கருவியைப் பயன்படுத்துகின்றமை அல்லது நீதிமன்றம் நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் வழக்குநடவடிக்கையினது கட்புல அல்லது செவிப்புலப் பதிவொன்றின் அல்லது இரண்டின தும் வெளியிடுகை அல்லது அனுப்புகை; அல்லது

(உ) பின்வரும் உட்கருத்துடன் நீதிமன்றம், நியாயசபை அல் லது நிறுவனமொன்றை அல்லது நீதிபதி அல்லது நீதிமுறை அலுவலரொருவரை அவதூறுக்குட்படுத்து கின்றமை:-

(i) முறையான நீதிநிருவாகத்துடன் தலையிடு வதற்கு;

(ii) ஒரு நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனம் தொடர்பாக பொதுமக்களின் மனதுகளில் அதிருப்தியைக் கிளறிவிடுவதற்கு; அல்லது

(iii) நீதிநிருவாகம் பற்றிப் பொதுமக்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துவதற்கு.

*நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதிப்பதற்கெதிரான எதிர்வாதங்கள்*

**4.** (1) பொதுமக்கள் அக்கறைகொண்டுள்ள ஒரு விடயம் பற்றி நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் வழக்கு நடவடிக்கை, தீர்ப்பு அல்லது கட்டளையொன்று தொடர்பில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட உண்மையான நிகழ்வுகள்பற்றிய ஏதேனும் வெளியீடு அல்லது கருத்துத்தெரிவிப்பு, அத்தகைய வழக்குநடவடிக்கைக்கு, தீர்ப்புக்கு அல்லது கட்டளைக்கு ஏதேனும் தடை அல்லது பங்கம் விளைவிக்கப்படுவதற்கான ஆபத்து வெறுமனே இடைநேர்விளைவானதாக இருக்குமிடத்து, அத்தகைய நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனத்தின் அவமதிப்பாகக் கருதப்படுதலாகாது.

(2) (அ) தீய நோக்கில்லாமல் அல்லது நீதிநிருவாகத்தை வலுக்குறைப்பதற்கான உட்கருத்தில்லாமல் செய்யப்பட்டதான நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் முன்பான ஏதேனும் வழக்கு அல்லது வழக்குநடவடிக்கைகளின் உண்மையான மற்றும் செம்மையான நிகழ்வுகள்பற்றிய; அல்லது

(ஆ) கேட்டு முடிபுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் வழக்கின் அல்லது விண்ணப்பத்தின் திறன்சார் மீதான நியாயமான கருத்துரைகள்பற்றிய,

ஏதேனும் வெளியிடுகை அல்லது கருத்துத்தெரிவிப்பு, ஏதேனும் அவமதிப்பைத் தவிர்ப்பதற்கு எல்லா எத்தனிப்புகளும் செய்யப்பட்டு அத்துடன் அத்தகைய வெளியிடுகை அல்லது கருத்துத்தெரிவிப்பு நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டுள்ளவிடத்து, நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அவமதிப்பாகக் கருதப்படுதலாகாது.

(3) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ள, நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அவமதிப்புக் கான வேறேதேனும் செல்லுபடியான எதிர்வாதத்தைப் பாதிப்பனவாக அல்லது வரையறுப்பனவாக (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் பொருளமைத்துக்கொள்ளப்படு தலாகாது.

நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனத்தின் ஒரு அவமதிப்பைத் தண்டிப்பதற்கு உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் தத்துவம்

**5.** (1) உயர்நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும், அவற்றின், சமுகத்தில் அல்லது அவற்றுக்குக் கேட்கும்வகையில் அல்லது வேறெங்கேனும் புரியப்பட்டதாயினுஞ்சரி, அவற்றை அவமதித்தமைக்காகத் தண்டிப்பதற்குத் தத்துவமுடையனவாதல் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்ப, உயர்நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்,-

(அ) அதன் சமுகத்தில் அல்லது அதற்குக் கேட்கும்வகையில் புரியப்பட்ட நீதிமன்ற அவமதிப்பைக் கவனத்துட்கொள்ளு மிடத்து, உயர்நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம், 7 ஆம் பிரிவிற்றரப்பட்டுள்ள நடவடிக்கை முறைக்கிணங்க அத்தகைய விடயத்தைக் கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அதன் சமுகத்தில் அல்லது அதற்குக் கேட்கும்வகை யிலல்லாது வேறுவகையாகப் புரியப்பட்ட நீதிமன்ற அவமதிப்பைக் கவனத்துட்கொள்ளுமிடத்து, 8 ஆம் பிரிவிற்றரப்பட்டுள்ள நடவடிக்கைமுறைக்கிணங்க அத்தகைய விடயத்தை உயர்நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம் கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டு நீதிமன்றமானது, முதனிலை நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் சமுகத்தில் அல்லது அதற்குக் கேட்கும்வகையில் அல்லது வேறெங்கேனும் புரியப்பட்ட தாயினுஞ்சரி, முதனிலை நீதிமன்றம், நியாயசபை அல்லது

நிறுவனமொன்றின் அவமதிப்புக்காகத் தண்டிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், முதனிலை நீதிமன்றம் அதற்கான அவமதிப்புக்காகத் தண்டிப்பதற்காக அவற்றுக்குள்ள உரிமைகளை இப்பிரிவின் ஏற்பாடுகள் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

(4) மேன்முறையீட்டு நீதிமன்றம், (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட முதனிலை நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அவமதிப்பைக் கவனத்துட்கொள்ளுமிடத்து, அம்மேன்முறையீட்டு நீதிமன்றம் 9 ஆம் பிரிவிற்றரப்பட்டுள்ள நடவடிக்கைமுறைக் கிணங்க அத்தகைய விடயத்தைக் கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும்.

நீதிமன்ற அவமதிப்பைத் தண்டிப்பதற்கு முதனிலை நீதிமன்றங்களுக்குள்ள தத்துவம்

**6.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், முதனிலை நீதிமன்றங்கள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அவற்றின் சமுகத்தில் அல்லது அவை கேட்கும்வகையில் அல்லது அத்தகைய முதனிலை நீதிமன்றங்களிலான வழக்குநடவடிக்கைகளின் போது புரியப்பட்ட ஏதேனும் நீதிமன்ற அவமதிப்புக்காக அல்லது நீதிமன்ற அவமதிப்பாகத் தண்டிக்கப்படற்பாலதென இச்சட்டத்தில் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் செயலுக்காகத் தண்டிப்பதற்குத் தத்துவமுடையனவாதல் வேண்டும்.

(2) ஏதேனும் முதனிலை நீதிமன்றம், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பைக் கவனத்துட்கொள்ளுமிடத்து, அத்தகைய முதனிலை நீதிமன்றம் 10 ஆம் பிரிவிற்றரப்பட்டுள்ள குறிப்பீடுசெய்யப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க அத்தகைய விடயத்தைக் கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும்.

நீதிமன்ற அவமதிப்பானது உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பார்வையில் உள்ளவிடத்தான நடவடிக்கை முறை

**7.** (1) விடயத்துக்கேற்ப உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் சமுகத்தில் அல்லது அதற்குக் கேட்கும்வகையில் ஆளொருவர் நீதிமன்ற அவமதிப்பைப் புரிந்துள்ளாரெனச், சார்த்தப்படுமிடத்து அல்லது உயர்நீதிமன்றத்துக்கு அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குத் தோன்றுமிடத்து, உயர் நீதிமன்றமானது அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றமானது –

(அ) அத்தகைய ஆளைக் கட்டுக்காப்பில் தடுத்துவைப்பதனைச் செய்விக்கலாம்;

(ஆ) நீதிமன்ற அவமதிப்பு புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்பட்ட நாளன்று உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அமர்வு முடிவதற்குமுன்னர் எந்நேரத்திலும் அல்லது அதன் பின்னர் இயன்றவு முற்கூட்டியதாக, அவர் எந்த நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்படுகின்றாரோ அந்த நீதிமன்ற அவமதிப்புப்பற்றி எழுத்திலான விபரங்களைக் கொடுத்து அவருக்குக் கட்டளைவிதியொன்று வழங்கப்படுவதனைச் செய்விக்கலாம்; அத்துடன்

(இ) குற்றச்சாட்டைக் கேட்பதற்கான தேதியொன்றை நிர்ணயிக்கலாம்.

(2) குற்றச்சாட்டைக் கேட்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக்கு அக்குற்றச்சாட்டுக்கான அவரது எதிர்வாதத்தைச் செய்வதற்கானவொரு வாய்ப்பு அளிக்கப்படுதல் வேண்டும்.

(3) விடயத்துக்கேற்ப, உயர்நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம், நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளைக் கேட்டபின்னரும் அவசியமாகக்கூடியவாறான அல்லது அத்தகைய ஆளினால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய சான்றை எடுத்தபின்னரும், ஒன்றில் உடனடியாக அல்லது தகுதியானதென உயர்நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம்

கருதக்கூடியவாறான அத்தகைய ஒத்திவைப்பின்பின்னர், குற்றச்சாட்டைத் தீர்மானிப்பதற்கும் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளின் தண்டனைக்கான அல்லது விட்டுவிடுகைக்கான கட்டளையை ஆக்குவதற்கும் மேற்கொண்டு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்:-

(அ) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர், அந்த அவமதிப்பு எந்த நீதிபதியின் அல்லது நீதிபதிகளின் சமுகத்தில் அல்லது அவர்கள் கேட்கும்வகையில் புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்படுகின்றதோ அந்த நீதிபதி அல்லது நீதிபதிகள் அல்லாத வேறு நீதிபதியினால் அல்லது நீதிபதிகளினால் அவருக்கெதிரான குற்றச்சாட்டு விளங்கப்படுவதற்கு வாய்மொழிமூலமாகவோ அல்லது எழுத்திலோ விண்ணப்பிக்குமிடத்தும்; அத்துடன்

(ஆ) அவ்வாறு செய்வது செயல்முறைக்குகந்ததென்றும் மற்றும் நீதிநிருவாகத்தின் முறையான நலன்கருதி அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் வேண்டுமென்றும் அந்நீதிமன்றம் அபிப்பிராயப்படுமிடத்தும்,

அக்குற்றச்சாட்டின் விளக்கம் தொடர்பில் வழங்குவதற்குத் தகுதியானதெனப் பிரதம நீதியரசர் கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்காக, விடயத்தின் நிகழ்வுகள்பற்றிய ஒரு கூற்றுடன்சேர்த்து, பிரதம நீதியரசரின்முன்னர் அவ்விடயம் இடப்படுவதனை அது செய்வித்தல் வேண்டும்.

(5) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், நீதிமன்ற அவமதிப்பானது எந்த நீதிபதியின் அல்லது நீதிபதிகளின் சமுகத்தில் அல்லது அவர்களுக்குக் கேட்கும்வகையில் புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்படுகின்றதோ அந்த நீதிபதி அல்லது நீதிபதிகள் அல்லாதவொரு நீதிபதியினால் அல்லது நீதிபதிகளினால் (4) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட

பணிப்பொன்றைப் பின்பற்றி நடாத்தப்படுகின்ற (1) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவரின் விளக்கத்தில், எந்த நீதிபதியின் அல்லது நீதிபதிகளின் சமுகத்தில் அல்லது அவர்களுக்குக் கேட்கும்வகையில் நீதிமன்ற அவமதிப்பு புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்படுகின்றதோ அந்த நீதிபதி அல்லது நீதிபதிகளினால் (4) ஆம் உட்பிரிவின்கீழ் பிரதம நீதியரசர்முன்னர் இடப்பட்ட நிகழ்வுகள்பற்றிய கூற்று சான்றில் பெறப்படுதல் வேண்டும், ஆனால் அத்தகைய நீதிபதி அல்லது நீதிபதிகள் எவரும் ஒரு சாட்சியாகக் கட்டளைவிட்டழைக்கப்படுதலோ அல்லது சாட்சியொருவராக விசாரணை செய்யப்படுதலோ ஆகாது.

(6) உட்பிரிவுகள் (2) மற்றும் (3) இன் ஏற்பாடுகள், (4) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்பொன்றைப் பின்பற்றி, ஏற்றமாற்றங்களுடன் ஆனால் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, எந்த நீதிபதியின் அல்லது நீதிபதிகளின் சமுகத்தில் அல்லது அவர்களுக்குக் கேட்கும்வகையில் நீதிமன்ற அவமதிப்பு புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்படுகின்றதோ அந்த நீதிபதி அல்லது நீதிபதிகள் அல்லாத நீதிபதியினால் அல்லது நீதிபதிகளினால் குற்றச்சாட்டு கேட்டுத் தீர்மானிக்கப்படுவதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழான குற்றச்சாட்டொன்று தீர்மானிக்கப்படும் வரை, விடயத்துக்கேற்ப, உயர் நீதிமன்றமானது அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றமானது -

(அ) இப்பிரிவின்கீழ் நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் அத்தகைய நீதிமன்றம் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய கட்டுக்காப்பில் தடுத்து வைக்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்கலாம்; அல்லது

(ஆ) விதிப்பதற்கு அத்தகைய நீதிமன்றம் தகுதியானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அவரைப் பிணையில் விடலாம்.

நீதிமன்ற அவமதிப்பானது உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பார்வையில் இல்லாத விடத்தான நடவடிக்கை முறை

**8.** (1) விடயத்துக்கேற்ப, உயர்நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம், -

(அ) அதன் சொந்தப் பிரேரணையின்மீது;

(ஆ) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் கோப்பிடப்பட்டவொரு பிரேரணையின்மீது; அல்லது

(இ) வேறெவரேனும் ஆளினால் கோப்பிடப்பட்ட பிரேரணையின்மீது,

அதன் சமுகத்தில் அல்லது அதற்குக் கேட்கும்வகையில் புரியப்பட்டவொரு நீதிமன்ற அவமதிப்புத்தவிர, அதற்கெதிராக அல்லது அதன் அதிகாரத்துக்கு அவமரியாதையாகப் புரியப்பட்ட நீதிமன்ற அவமதிப்பொன்றைக் கவனத்துட் கொள்ளலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கோப்பிடப்பட்ட ஒவ்வொரு பிரேரணையும், நீதிமன்ற அவமதிப்பைப் புரிந்தவரெனச் சார்த்தப்பட்ட ஆளினால் புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட நீதிமன்ற அவமதிப்பின் விபரங்களை எடுத்துக்கூறுதல் வேண்டும்.

(3) விடயத்துக்கேற்ப, உயர்நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம், (1) ஆம் உட்பிரிவின்கீழ் கோப்பிடப்பட்ட பிரேரணையைப் பின்பற்றியபின்னரும் நீதிமன்ற அவமதிப்பைப் புரிந்துள்ளவரெனச் சார்த்தப்பட்ட ஆளுக்கெதிராக முதற்றோற்ற வளவிலான அத்தகைய அவமதிப்பு வழக்கொன்று நிலைநாட்டப்பட்டுள்ளதெனத் தன்னைத் திருப்திப்படுத்தியபின்னரும்,-

(அ) அவர் எந்த நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றஞ் சார்த்தப்படுகின்றாரோ அந்த நீதிமன்ற அவமதிப்புப் பற்றிய விபரங்களை எழுத்தில் கொடுத்து, அத்தகைய ஆளுக்குக் கட்டளைவிதியொன்று வழங்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்;

(ஆ) அத்தகைய கட்டளைவிதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் கோப்பிடப்பட்ட பிரேரணையின் பிரதியொன்றுடன் சேர்த்து, அத்தகைய ஆளுக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப் படுதல் வேண்டுமெனப் பணித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) குற்றச்சாட்டின் கேட்புக்கான தேதியொன்றை நிர்ணயித்தல் வேண்டும்.

(4) குற்றச்சாட்டைக் கேட்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக்கு, அக்குற்றச்சாட்டுக் கான அவரது எதிர்வாதத்தைச் செய்வதற்கான வாய்ப்பொன்று அளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவரது எதிர்வாதத்தில் சத்தியக்கடுதாசியொன்றைக் கோப்பிடுவதற்கு அல்லது சான்றைச் சமர்ப்பிப்பதற்கு அவர் உரித்துடையவராதலும் வேண்டும்.

(5) விடயத்துக்கேற்ப, உயர்நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம், விடயத்துக்கேற்ப, நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளினால் கோப்பிடப்பட்ட சத்தியக்கடுதாசி யைக் கவனத்துட்கொண்டபின்னர் அல்லது அத்தகைய ஆளினால் சமர்ப்பிக்கப்பட்ட சான்றைக் கேட்டபின்னர் குற்றச்சாட்டைக் கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழான குற்றச்சாட்டொன்று தீர்மானிக்கப்படும் வரை, விடயத்துக்கேற்ப, உயர்நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம் பின்வருமாறு பணிக்கலாம்:-

(அ) இப்பிரிவின்கீழ் நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றஞ் சாட்டப்பட்ட ஆள், அது குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய கட்டுக்காப்பில் தடுத்துவைக்கப்படுதல் வேண்டுமென்று; அல்லது

(ஆ) விதிப்பதற்குத் தகுதியானவையென அது கருதுகின்ற வாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அத்தகைய ஆள் பிணையில் விடப்படுதல் வேண்டுமென்று.

முதனிலை நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவன மொன்றுக்கு எதிராகப் புரியப்பட்ட அவமதிப்புத் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக் கத்தைப் பிரயோகிப்ப தற்கான நடவடிக்கை முறை

**9.** (1) மேன்முறையீட்டு நீதிமன்றமானது முதனிலை நீதிமன்றம் அல்லது நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அதிகாரத்துக் கெதிராக அல்லது அதன் அதிகாரத்துக்கு அவமரியாதையாகப் புரியப்பட்டவொரு அவமதிப்பைப் பின்வருவனவற்றின் மீது கவனத்துட்கொள்ளலாம்:-

(அ) அத்தகைய முதனிலை நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனத்தினால் அதற்குச் செய்யப்பட்டவொரு குறிப் பீட்டின்மீது;

(ஆ) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் கோப்பிடப்பட்ட ஒரு பிரேரணையின்மீது; அல்லது

(இ) வேறெவரேனுமாளினால் கோப்பிடப்பட்ட ஒரு பிரேரணையின் மீது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு குறிப்பீடும் அல்லது கோப்பிடப்பட்ட பிரேரணையும், விடயத்துக்கேற்ப, நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனத்தின் அவமதிப்பைப் புரிந்துள்ளவரெனச் சார்த்தப்பட்ட ஆளினால் புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட அத்தகைய அவமதிப்புப் பற்றிய விபரங்களை எடுத்துக்கூறுதல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டு நீதிமன்றம், விடயத்துக்கேற்ப, (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட குறிப்பீட்டை அல்லது கோப்பிடப்பட்ட பிரேரணையை நுனித்தாராய்ந்தபின்னரும், ஒரு நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனத்தின் அவமதிப்பைப் புரிந்துள்ள வரெனச் சார்த்தப்பட்ட ஆளுக்கெதிராக அத்தகைய அவமதிப்புப் பற்றி முதற்றோற்றவளவிலான வழக்கு நிலைநாட்டப் பட்டுள்ளதெனத் தன்னைத் திருப்திப்படுத்தியதன்பின்னரும் -

(அ) அவர் எந்த நீதிமன்ற அவமதிப்புக்குக் குற்றஞ் சார்த்தப்படுகின்றாரோ அந்த நீதிமன்ற அவமதிப்புப் பற்றிய விபரங்களை எழுத்தில் கொடுத்து, அத்தகைய ஆளுக்குக் கட்டளைவிதியொன்று வழங்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்;

(ஆ) அத்தகைய கட்டளைவிதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட குறிப்பீட்டின் அல்லது கோப்பிடப்பட்ட பிரேரணையின் பிரதியொன்றுடன் சேர்த்து அத்தகைய ஆளுக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமெனப் பணித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) குற்றச்சாட்டைக் கேட்பதற்கானவொரு தேதியை நிர்ணயித்தல் வேண்டும்.

(4) குற்றச்சாட்டைக் கேட்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக்கு அக்குற்றச்சாட்டுக்கான அவரது எதிர்வாதத்தைச் செய்வதற்கான வாய்ப்பொன்று அளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவரது எதிர்வாதத்தில் ஒரு சத்தியக் கடுதாசியைக் கோப்பிடுவதற்கு அல்லது சான்றைச் சமர்பிப்பதற்கு அவர் உரித்துடையவராதலும் வேண்டும்.

(5) மேன்முறையீட்டு நீதிமன்றம், விடயத்துக்கேற்ப, அத்தகைய அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளினால் கோப்பிடப்பட்ட சத்தியக்கடுதாசியைக் கவனத்துட்கொண்டபின்னர் அல்லது அத்தகைய ஆளினால் சமர்ப்பிக்கப்பட்ட சான்றைக் கேட்டபின்னர் அக்குற்றச்சாட்டைக் கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழான குற்றச்சாட்டொன்று தீர்மானிக்கப்படும்வரை மேன்முறையீட்டு நீதிமன்றம் பின்வருவனவற்றைப் பணிக்கலாம்:-

(அ) இப்பிரிவின்கீழ் ஒரு நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனத்தின் அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள், அது குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய கட்டுக்காப்பில் தடுத்துவைக்கப்படுதல் வேண்டுமென்று; அல்லது

(ஆ) விதிப்பதற்குத் தகுதியானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அத்தகைய ஆள் பிணையில் விடப்படுதல் வேண்டுமென்று.

நீதிமன்ற அவமதிப்பை விளங்குவதற்கு முதனிலை நீதிமன்றங்களுக்கு அளிக்கப்பட்ட நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதற்கான நடவடிக்கை முறை

**10.** (1) முதனிலை நீதிமன்றமொன்று, அத்தகைய முதனிலை நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கெதிராக அல்லது அதன் அதிகாரத்துக்கு அவமரியாதையாகப் புரியப்பட்ட நீதிமன்ற அவமதிப்பைக் கவனத்துட்கொள்ளுமிடத்து, அத்தகைய முதனிலை நீதிமன்றம், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் LXV ஆம் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ள நடவடிக்கைமுறைக்கிணங்க அத்தகைய விடயத்தைக் கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தின் நீதிபதி குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 795 ஆம் பிரிவின்கீழ் செயலாற்றுமிடத்து, எந்த நீதிபதியின் சமுகத்தில் அல்லது அவருக்குக் கேட்கும்வகையில் நீதிமன்ற அவமதிப்பு புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்படுகின்றதோ அந்த நீதிபதியல்லாத ஒரு நீதிபதியினால் விளங்கப்படுவதற்கு அவர் விரும்புகின்றாராவென்பதை நீதிபதி குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் விசாரித்தல் வேண்டும்.

(3) எந்த நீதிபதியின் சமுகத்தில் அல்லது அவருக்குக் கேட்கும்வகையில் நீதிமன்ற அவமதிப்பு புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்படுகின்றதோ அந்த நீதிபதியல்லாத வேறொரு நீதிபதியினால் குற்றஞ்சாட்டப்பட்டவர் விளங்கப்படுவதற்கு விரும்புகின்றாரென (2) ஆம் உட்பிரிவின்கீழான விசாரிப்புக்குப் பதிலிறுத்து அவர் வாய்மொழிமூலமாகவோ அல்லது எழுத்திலோ அத்தகைய முதனிலை நீதிமன்றத்தின் நீதிபதிக்குச் சுட்டிக்காட்டினால், குற்றச்சாட்டைக் கேட்பது தொடர்பாகப் பிரதம நீதியரசர் வழங்குவதற்குத் தகுதியானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்காகப் பிரதம நீதியரசரின் முன்னர் அத்தகைய நீதிபதியினால் பதியப்பட்ட நிகழ்வுகள் பற்றிய நிகழ்ச்சிக்குறிப்புகளுடன் சேர்த்து அவ்விடயம் இடப்படுவதனை அந்நீதிபதி செய்வித்தல் வேண்டும்.

நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அவமதிப்புக்கான தண்டனை

**11.** (1) ஐந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடுசெய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்புக்கு ஆளொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து, அத்தகைய ஆள் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதிக்குச் சாதாரண மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும்

ஆளாதல் வேண்டுமென்பதுடன் இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரானவொரு குற்றத்தீர்ப்பின்மீது அத்தகைய ஆள் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குச் சாதாரண மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஆறாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்புக்கு ஆளொருவர் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து, அத்தகைய ஆள், மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதிக்குச் சாதாரண மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டுமென்பதுடன் இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரானவொரு குற்றத்தீர்ப்பின்மீது அத்தகைய ஆள் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குச் சாதாரண மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் ஆளொருவர் நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அவமதிப்புக்குக் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து, அத்தகைய ஆள் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதிக்குச் சாதாரண மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டுமென்பதுடன் இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரானவொரு குற்றத்தீர்ப்பின்மீது, அத்தகைய ஆள் மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்கங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குச் சாதரண மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) உட்பிரிவு (1), (2) அல்லது (3) இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அவமதிப்புக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர், அந்நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனத்தின் திருப்திக்கு மன்னிப்பொன்று செய்யப்படுவதன்மீது விடுவிக்கப் படலாம் அல்லது விதிக்கப்பட்ட தண்டனை குறைக்கப்படலாம்.

விளக்கம் - மன்னிப்பொன்றைக் குற்றஞ் சாட்டப்பட்டவர் நல்லெண்ணத்துடன் செய்தால், தகைவரம்புடையது அல்லது நிபந்தனையுடனானது என்ற ஏதுவின்மீது அது வெறுமனே நிராகரிக்கப்படுதலாகாது.

(5) இச்சட்டத்திலுள்ளதெதுவும், ஒன்றில் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்ட நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவன மொன்றின் அவமதிப்பைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு ஒரு நீதி மன்றத்தின் தத்துவத்தை வரையறுத்தலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய வேறு சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அவமதிப்புக்காக இப்பிரிவிற் குறித்துரைக் கப்பட்ட தண்டனைத்தீர்ப்புக்கு விஞ்சுதலானவொரு தண்டனைத் தீர்ப்பை நீதிமன்றமொன்று விதித்தலாகாது.

**12.** (1) மேன்முறையீட்டு நீதிமன்றம், விடயத்துக்கேற்ப, முதனிலை நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அவமதிப்புக்காகத் தண்டிப்பதற்கு அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், அதன் ஏதேனும் கட்டளை அல்லது முடிபிலிருந்து உரிமையென்றவகையாகப் பின்வருவனவற்றுக்கு மேன்முறையீடொன்று செய்யப்படக்கூடியதாதல் வேண்டும்:- மேன்முறை யீடுகள்

(அ) கட்டளை அல்லது முடிபு தனியொரு நீதிபதியின தாகவிருக்குமிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகளுக்குக் குறையாத நீதிபதிகள் குழாத்துக்கு;

(ஆ) கட்டளை அல்லது முடிபு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஒரு நீதிபதிகள் குழாத்தினதாகவிருக்குமிடத்து, உயர்நீதிமன்றத்துக்கு.

(2) ஏதேனும் மேன்முறையீடு முடிவுறும்வரை, உயர் நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம் பின்வருமாறு கட்டளையிடலாம்:-

(அ) தண்டனையின் அல்லது எந்தக் கட்டளைக்கு அல்லது முடிபுக்கெதிராக மேன்முறையீடுசெய்யப்படுகின்றதோ அந்தக் கட்டளையின் அல்லது முடிபின் நிறைவேற்றுகை இடைநிறுத்தப்படவேண்டுமென்று;

(ஆ) மேன்முறையீட்டாளர் மறித்துவைக்கப்பட்டிருப்பின், அவர் பிணையில் விடப்படுதல் வேண்டுமென்று; அல்லது

(இ) மேன்முறையீட்டாளருக்கு அவரது அவமதிப்பிலிருந்து விடுதலையளிக்கப்படவில்லை என்பது எவ்வாறிருப்பினும், மேன்முறையீடு கேட்கப்படுதல் வேண்டுமென்று.

(3) முதனிலை நீதிமன்றமொன்றின் எந்தக் கட்டளை அல்லது முடிபுக்கெதிராக மேன்முறையீடொன்று கோப்பிடப்படலாமோ அந்த ஏதேனும் கட்டளையினால் அல்லது முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய கட்டளை அல்லது முடிபுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்றைச் செய்வதற்கு அவர் உட்கருதுகின்றாரென அத்தகைய முதனிலை நீதிமன்றத்துக்குச் சுட்டிக்காட்டுமிடத்து, அத்தகைய முதனிலை நீதிமன்றம், மேன்முறையீட்டைக் கோப்பிடுவதற்கான காலவரையறை முடிவுறும்வரை,-

(அ) தண்டனையின் அல்லது எந்தக் கட்டளைக்கு அல்லது முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்தக் கட்டளையின் அல்லது முடிபின் நிறைவேற்றுகை இடைநிறுத்தப்படுதல் வேண்டுமென்று; அல்லது

(ஆ) மேன்முறையீட்டாளர் மறித்துவைக்கப்பட்டிருப்பின், அவர் பிணையில் விடப்படுதல் வேண்டுமென்று,

கட்டளையிடுதல் வேண்டும்.

*ஒரு நீதிமன்ற அல்லது நிறுவனத்தின் நியாயசபை அவமதிப்புக் காக வழக்கு நடவடிக்கை களுக்கான வரையறைக் காலப்பகுதி*

**13.** (1) அவமதிப்பானது எத்தேதியன்று புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதி முடிவுற்றபின்னர், நீதிமன்றமொன்று, ஒன்றில் அதன் சொந்தப் பிரேரணையின் மீது அல்லது வேறுவகையாக, நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அவமதிப்புத் தொடர்பான எவையேனும் வழக்குநடவடிக்கைகளைத் தொடக்கிவைத்தலாகாது.

(2) நியாயசபை அல்லது நிறுவனமொன்று, அவமதிப்பானது எத்தேதியன்று புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதி முடிவுற்றபின்னர், அத்தகைய நியாயசபை அல்லது நிறுவனத்தின் அவமதிப்புத் தொடர்பான ஏதேனும் விடயத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்துதலாகாது.

*ஓர் ஆட்கள் குழுவினால் நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவன மொன்றின் அவமதிப்பு*

**14.** இச்சட்டத்தின்கீழ் ஆட்கள் நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றின் அவமதிப்பு குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது –

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக விருப்பின், அத்தகைய அவமதிப்பு புரியப்பட்ட நேரத்தில் அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும் அல்லது செயலாளரும்;

(ஆ) அந்த ஆட்கள் குழு ஒரு குழுமமாகவிருப்பின் அத்தகைய அவமதிப்பு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்; அத்துடன்

(இ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாக விருப்பின், அத்தகைய அவமதிப்பு புரியப்பட்ட நேரத்தில் அத்தகைய கூட்டிணைக்கப்படாத குழுவின் உறுப்பினராகவுள்ள ஒவ்வொரு தனியாளும்,

அந்த அவமதிப்பைப் புரிந்துள்ள வராகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எவரேனும் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது செயலாளர் அல்லது அத்தகைய குழுமத்தின் எவரேனும் பங்காளர் அல்லது அத்தகைய கூட்டிணைக்கப்படாத குழுவிலுள்ள எவரேனும் தனியாள் அத்தகைய அவமதிப்பு அவர் அறியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய அவமதிப்புபுரியப்படுவதைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் தான் பிரயோகித்தாரென நீதிமன்றத்தின் திருப்திக்கு அவர் எண்பித்தால் அத்தகைய அவமதிப்பைப் புரிந்துள்ளாரெனக் கருதப் படுதலாகாது.

இச்சட்டம் வேறு சட்டத்தின்மீது மேலோங்கி நிற்றல்

**15.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுறுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க, இச்சட்டத்தினதும் அத்தகைய வேறு சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

பொருள் கோடல்

**16.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய –

"குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை" என்பது, (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை என்று பொருளாகும்;

"முதனிலை நீதிமன்றம்" என்பது, இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம், அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மாகாணங்களுக்கான மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், குடும்ப நீதிமன்றம், சிறுகோரிக்கை நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம் அல்லது ஆரம்ப நீதிமன்றம் என்று பொருளாகும்;

"நிறுவனம்" என்பது, நீதிநிருவாகத்துக்காகவும் கைத்தொழில் மற்றும் வேறு பிணக்குகளைத் தீர்ப்பதற்காகவும் தீர்த்து வைப்பதற்காகவும் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனம் என்று பொருளாகும்;

"வெளியிடுதல்" என்பது, எல்லாப் பொதுமக்களுக்கும் அல்லது பொதுமக்களின் உறுப்பினரொருவருக்கு, செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி என்றவகையாக அல்லது இணையத்தளம் அல்லது வேறு இயங்கலைத் தொடர்பு முறைமையின் பாவனையினூடாக உட்பட, வாய்மொழி மூலமான, கட்புல, எழுத்திலான, இலத்திரனியல் அல்லது வேறு வழிவகைகள்மூலம் பரப்புதல், விநியோகித்தல், காட்சிக்குவிடுதல், வழங்குதல் அல்லது தொடர்பாடல் என்று பொருளாகும் என்பதுடன் வெளியிடச்செய்வ தனையும் உள்ளடக்கும்; அத்துடன் "வெளியீடு" என்பது, அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

"நியாயசபை" என்பது, நீதிநிருவாகத்துக்காகவும் கைத்தொழில் மற்றும் வேறு பிணக்குகளைத் தீர்ப்பதற்காகவும் தீர்த்து வைப்பதற்காகவும் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஒரு நியாயசபை என்று பொருளாகும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**17.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.